**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.20/2022** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 6** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| **Name :** | அப்பாதுரை | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **23.01.2026**

**1, 2 எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை:**

நான் விளாமுத்தூரில் குடியிருக்கிறேன். தனியார் கல்லூரியில் கிளினராக வேலைசெய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கில் இறந்துபோன பச்சையம்மாள் என்அம்மா ஆவார். அவருக்கு என்னை சேர்த்து 3மகன்கள். அதில் சங்கர் இறந்துவிட்டார். மற்றொருவர் ராஜேந்திரன் ஆவார். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் நான் ராமகிருஷ்ணா பள்ளியில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது அழகேசன் என்பவர் பள்ளிமேலாளருக்கு போன்செய்து பள்ளிமேலாளர் என்னை அழைத்து உன்னுடைய அம்மா இறந்துவிட்டதாக தகவல் வந்துள்ளது என்றும், நீ போ என்று சொன்னார். நான் அதன்பின்னர் நான் ஊருக்கு போனேன். அங்கு என்அம்மா இறந்துகிடந்தார். போலிசார் வந்தார்கள். கிட்டே போகவேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். அதன்பிறகு மோப்பநாய் வந்தது அது விளாமுத்தூர் மருதையான்கோவில் வரை சென்றது. என்அம்மாவை கோகுலும், இன்னொருவரும் சேர்ந்து அடித்து கொன்றுவிட்டதாக விசாரித்ததில் தெரிந்தது. என்தம்பி சங்கரின் மகன் எதிரி

கோகுல் ஆவார். கேமராவில் பார்த்து எதிரிகள் வந்துசென்றவிவரம் தெரிந்தது. அவர் வசிக்கும் வீட்டில் ஆடுகட்ட கூடாது என்று என்அம்மா சொன்னார். (சாட்சி அழுகிறார்). என்அம்மாவுக்கும் மருமகளுக்கும் ஆடு கட்டுவது சம்மந்தமாக சண்டை வரும். போலிசார் என்னை விசாரித்தார்களா என்றால் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், விசாரிக்கவில்லை.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**</u>

ஆஜர் எதிரிகளில் என்தம்பி மகனை மட்டும்தெரியும். மற்றொருவரை தெரியாது. அவர் அயிலூர்காரர். போலிசார் சொல்லி அவர் அயிலூர்காரர் என்று தெரியும். நான் முதல்விசாரைணையில் தற்போது சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரணையில் சொன்னேன். வேறுவிவரங்கள் சொல்லவில்லை. நான் சொல்ல சொல்ல போலிசார் பேனாவில் எழுதிகொண்டார்கள். அவ்வாறு எழுதியதில் நான் கையெழுத்து செய்தேன். ஆடு கட்டியதால் அவர்களுக்குள் பிரச்சனை மற்றும் சண்டை ஏற்பட்டது என்று நான் கேள்விபட்டேன். மற்ற விவரங்களும் கேள்விபட்டேன். என்னை காவல்நிலையம் அழைத்துசென்று போலிசார் விசாரித்தார்கள், அங்கு கையெழுத்து வாங்கினார்கள், விளாமுத்தூரிலும் கையெழுத்து வாங்கினார்கள். இறந்துபோனவர் என்அம்மாதான் என்று சொன்னேன். உறவினர் என்று சொல்லவில்லை. போலிசார் சொல்லிகொடுத்தப்படி வழக்கிற்கு ஏற்றபடி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.